# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

## சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம்

**இலங்கை, நுவரெலியா - இலங்கை வனவியல் நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட அபிவிருத்திக்காக கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கனிஷ்ட ஊழியர் விடுதி மற்றும் உடற்பயிற்சிக் கூட நிர்மாணம் - SLFI - நுவரெலியா (P1)**

**IFB NO. – LK-ESCAMP-PMU-102579-CW-RFB**

1. சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் செலவுக்காக உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு இலங்கை, நுவரெலியா - இலங்கை வனவியல் நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட அபிவிருத்திக்காக கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிர்மாணத்திற்கான ஒப்பந்தங்களின் கீழ் கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனில் ஒரு பகுதியை செயற்படுத்துவதற்கு நோக்கம் கொண்டதாகும்.
2. வன பாதுகாப்பு திணைக்களத்திற்காக நுவரெலியா - இலங்கை வனவியல் நிறுவனத்தின் முன்மொழியப்பட்ட அபிவிருத்திக்கு கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிர்மாணத்திற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் சார்பில் திட்ட பெறுகை குழு (PPC) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. மதிப்பிடப்படும் செலவு VAT தவிர்த்து 215 மில்லியன் ரூபாவாகும்.

   வரைபடங்கள், விவரக்குறிப்புகள், சுற்றுச்சூழல் முகாமைத்துவ திட்டம் மற்றும் அளவுப் பட்டியலில் விபரிக்கப்பட்டவாறு இயந்திர மற்றும் மின்சார வேலைகள் உட்பட நுவரெலியாவில் வனவியல் கல்லூரியின் பதினொரு (11) கட்டடங்களின் சிவில் வேலைகளை கொண்ட வேலை நோக்குடையதாகும்.

   நிர்மாணக் காலம் அண்ணளவாக 450 நாட்களாகும் (15 மாதங்கள்)
3. தேசிய போட்டி விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைகேட்பு நடத்தப்படும்.
   - ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு தகுதியை பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராக, பின்வரும் தகைமை அடிப்படைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் கட்டட நிர்மாண சிறப்புத்தன்மையில் தரம் C-2 அல்லது அதற்கு மேற்பட்டதாக CIDA (ICTAD என முன்னர் அறியப்பட்டது) உடன் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் நிர்மாண வேலை செயற்பாட்டின் சராசரி ஆண்டு வருவாய் குறைந்தபட்சம் 350 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழான எந்த ஒரு முற்கொடுப்பனவுகளும் தவிர்த்து திரவச் சொத்து மற்றும்/ அல்லது குறிப்பிட்ட கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை 60 மில்லியன் டொலருக்கு குறையாதிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் பெறுகை பிரிவு, சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம், ''சம்பத்பாய'', இல.82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல என்ற முகவரியில் 2019.09.09 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் மேலதிக விபரங்களை பெறலாம். சாதாரண வேலை நேரங்களில் மேலுள்ள முகவரியில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். (தொலைபேசி இலக்கங்கள்: 0112888426/0112888427).
5. மீளளிக்கப்படாத கட்டணம் 45,000.00 ரூபாவை செலுத்தி மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 2019.08.16 தொடக்கம் 2019.09.09 வரை திட்டப் பணிப்பாளர், சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம், ''சம்பத்பாய'', இல.82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு CIDA பதிவின் பிரதி ஒன்றுடன் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, திட்ட கணக்காளருக்கு கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
6. இரு பிரதிகளான விலைமனுக்கள் ''அசல்'' மற்றும் ''பிரதி'' என குறிப்பிட்டு வெவ்வேறு கடித உறைகளில் இட்டு மூடப்பட்டு, ஓர் உறையில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் நிர்மாணத்தின் தலைப்பை குறிப்பிட்டு கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு 2019.09.10 அன்று மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம், ''சம்பத்பாய'', இல.82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லவில் திட்ட முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் விலைமனுக்களை இடவும் முடியும். இதே முகவரியில் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின் விரைவில் திறக்கப்படும்.
7. தள பயணம் மற்றும் மேற்பார்வை 2019.09.03 அன்று மு.ப. 10.00 க்கு இடம்பெறும் என்பதோடு, இதே தினத்தில் (2019-09-03) மு.ப. 10.00க்கு நுவரெலியா வனவியல் கல்லூரி வளவில் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இடம்பெறும்.
8. விலைமனுக்கள் 2020-02-05 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. மத்திய வங்கியில் இணைந்த வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட விலைமனுப் பிணை ஒன்றை கொண்டதாக அனைத்து விலைமனுக்களும் இருத்தல் வேண்டும். விலைமனு ஆவணத்தில் இணைக்கப்பட்ட வடிவத்தில் உள்ளவாறு இரண்டு மில்லியன் முந்நூறு ஆயிரம் ரூபா மாத்திரம் (ரூபா 2,300,000.00) விலைமனுப் பிணை தொகை இருத்தல் வேண்டும் என்பதோடு சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, திட்ட பணிப்பாளரின் பெயரில் இருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை 2020.03.06 வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
10. விலைமனுதாரர்கள் தமது விலைமனுக்களுடன் PCA 3 படிவம் (1987 இன் பொது ஒப்பந்த சட்டம்) வழங்கப்படல் வேண்டும்.
11. தள பயணத்துடன் தொடர்புடைய செலவுகள் மற்றும் கட்டணங்கள் உட்பட விலைமனுக்களின் தயார்படுத்தல் அல்லது சேர்த்தலுடன் தொடர்புடைய விலைமனுதாரர்கள் மூலம் ஏற்படும் எந்த ஒரு செலவுகள் அல்லது கட்டணங்கள் தொழில்வழங்குநர் மூலம் பொறுப்பேற்கப்படமாட்டாது.
12. கிடைக்கப்பெற்ற எந்த ஒரு விலைமனுவையும் ஏற்பது அல்லது நிராகரிப்பது தொடர்பில் முழு உரிமை திட்ட பெறுகைக் குழு பெற்றிருப்பதோடு இது தொடர்பில் திட்ட பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

**தலைவர்**
**திட்ட பெறுகை குழு (PPC)**
**திட்ட முகாமைத்துவப் பிரிவு,**
**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**''சம்பத்பாய'', இல.82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல.**
**தொ. இல. 0112888426/ 0112888427**
**www.escamp.lk**